6. **வீட்டுத் தோட்டத்தின் வேலியினை பிரயோசனப்படுத்தல்**





பயன் தரக்கூடிய பயிர்களை வேலிக்கு நடவும் (அகத்தி, கோப்ப, அன்னாசி போன்ற பயிர் வகைகள்) கொடிப் பயிர்களை வேலியில் படர விடவும். (சிறகவரை, கொடி தோடை)

7. **இடவசதி மற்றும் நிலப்பரப்பு குறைந்த வீடுகளில் செங்குத்தான பகுதிகளை பயன்படுத்தல்**





சாடிகளில் பயிர்ச்செய்கை (மிளகாய், கறிமிளகாய், வல்லாரை, இஞ்சி, மேல்மாடியின் முன்றலையும் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தலாம்)

- குடும்பத்தாரின் வலுவினை பயன்படுத்தக்கூடிய விதத்திற்கேற்ப பயிர்ச்செய்கை முறையினை தயாரித்து கொள்ளவும்.
- பல்லாண்டு பயிர்கள் மற்றும் பிரதேசத்திற்கு பொருத்தமான பயிர்களை ஒன்று சேர்த்துக் கொள்வதன் மூலம் மனிதவலு பயன்பாட்டினை குறைத்தக் கொள்ள முடியும்.
- சேதன பசளை உருவாக்கிக் கொள்வதற்கான முறை ஒன்று வீட்டுத் தோட்டததிற்கு அத்தியவசியமாகும்.
- தேனீ வளர்ப்பு சிறிய கால்நடை வளர்ப்பு அலகு போன்றவற்றை உருவாக்கிக் கொள்வதன் மூலம் வீட்டுத் தோட்டத்தின் உற்பத்தி திறனை அதிகரித்துக் கொள்ள முடியும்.

**மாதிரி வீட்டுத் தோட்டத்தை திட்டமிடல், உருவாக்கல் மற்றும் பராமரித்தல் தொடர்பான தொழில்நுட்ப வழிகாட்டலுக்காக உங்கள் பிரதேச விவசாயப் போதனாசிரின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்**

ஆக்கம் :- ஜயந்தா இலங்கோன் - (மேலதிக விவசாயப் பணிப்பாளர் - விரிவாக்கம்)
திஸ்னா ரத்னசிங்க (உதவி விவசாயப் பணிப்பாளர் - மகளிர் விவசாய விரிவாக்கம்)
விவசாயப் பயிற்சி நிலையம் விவசாயத் திணைக்களம் - பேராதனை

தமிழாக்கம் :- எம். ஆர்.எம். பவாஸ் (விவசாயப் போதனாசிரியர்)
விவசாயப் பயிற்சி நிலையம் விவசாயத் திணைக்களம் - பேராதனை

Designed & Printed by : NATIONAL AGRICULTURE INFORMATION & COMMUNICATION CENTRE, Department of Agriculture

ගොවිතැනට මුල්තැන

FOOD FIRST

# விளைச்சல் பெருகிட
## ஒருமித்து எழுவோம்

## தேசிய உணவு உற்பத்தி புரட்சி

### உலர் வலய வீட்டுத் தோட்டம்



**விவசாயத் திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம்**
**விவசாய அமைச்சு**

# பயிரிடத்தக்க நிலப்பரப்பு 250 சதுர மீற்றர் (10 பேர்சஸ்) ஆகவுள்ள உலர் வலய வீட்டுத் தோட்டத்திற்கான மாதிரித் திட்டமிடல்




## திட்டமிடலின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்

- புதிதாக அபிவிருத்தி செய்யப்படும் வீட்டுத் தோட்டம் ஒன்றாகக் கருதி வரைபடம் உருவாக்கப்பட்டுள்ளது.
- வீடு தவிர்ந்த எஞ்சிய நிலப்பரப்பு 10 பேர்சஸ் என கருதப்பட்டுள்ளது.
- பல்லாண்டுப் பயிர்களின் விதானம் பரந்து செல்லும் அளவிற்கேற்ப குறித்த பயிர்களுக்கு அவசியப்படும் நிலப்பரப்பு குறித்துக் காட்டப்பட்டுள்ளது.
- சில பிரதான பயிர்கள் மாத்திரமே வரை படத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ளது. வீட்டுத் தோட்டத்தின் தன்மை மற்றும் வீட்டு உரிமையா ளரின் விருப்பங்களுக்கு அமைய பொருத்தமான பயிர்களை தேர்ந்தெடுக்கவும்.
- தற்போதைய பயிர் அடர்த்தியை கருத்திற் கொண்டு பொருத்தமான பயிர்களை உள்ளடக்கவும்.
- முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் கீழ்ச் செய்கைகளை (மூடுபடைகள்) திட்டமிடவும்.
- தென்னை போன்ற பல்லாண்டு பயிர்களை சுற்றிவர பொருத்தமான பயிர்களை பயிரிடவும்.

**தரப்பட்டுள்ள தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி இதனை ஒரு வழிகாட்டலாக கருதி குறித்த வீட்டிற்க பொருத்தமான முறையில் திட்டமிடவும்.**

# உலர் வலய வீட்டுத் தோட்டம் ஒன்றை திட்டமிடுவதற்கான வழிகாட்டல் (பயிரிடத்தக்க நிலப்பரப்பு 250 சதுர மீற்றர்கள்)

**நோக்கம்**

மட்டுப்படுத்தப்பட்ட நிலப்பரப்பிலிருந்து சிறந்த பலனை பெறும் நோக்கில் பல்வேறுப்பட்ட பயிர் வகைகள் உச்ச எண்ணிக்கையில் உள்ளடங்கும் வகையில் வீட்டுத் தோட்டத்தை திட்டமிடுவதன் மூலம் வீட்டு உரிமையாளரின் அன்றாட போசணைத் தேவையை இயன்றளவில் ஈடு செய்வதும்,மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்வதன் மூலம் குடும்பத்தின் உணவு நுகர்வு பழக்கத்தை மேம்படுத்துவதும் சூழலுக்கு தோழமையான முறைகளை பயன்படுத்துவதன் மூலம் சூழல் பாதுகாப்பினை பேணுவதும் வீட்டிற்கு அழகினை பெற்றுத்தர கூடிய வீட்டுத் தோட்டம் ஒன்றை உருவாக்கி அதனை உரிய முறையில் பராமரிக்க ஊக்குவிப்பதுமே பிரதான நோக்கமாகும்.

இவ்வாறான வீட்டுத் தோட்டம் ஒன்றின் பிரதான எல்லைப்படுத்தும் காரணிகள் பயிரிடத்தக்க, மண் மற்றும் வீட்டுத் தோட்டத்திற்காக பெற்றுக் கொள்ளக்கூடிய நீரின் அளவு என்பனவாகும். எனவே அத்தியவசியமான அலகுகள் மற்றும் பயிர்களை மாத்திரம் வீட்டுத் தோட்டத்திற்கு பொருந்தும் விதத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும்.

## திட்டமிடலின் பிரதான படிமுறைகள்

வீட்டுத் தோட்டத்தின் தற்போதைய நிலையை இனங்கண்டு கொள்ளல், வரைபடங்களை திட்டமிடல் உள்ளடங்களாக சகல நடவடிக்கைகளின் போதும் வீட்டுத் தோட்ட உரிமையாளரை பங்கேற்கச் செய்வது அத்தியவசியமாகும்.

1. வீட்டுத் தோட்டத்தின் தற்போதைய நிலையை இனங்கண்டு கொள்ளல்

- நிலத்தின் தன்மை - சரிவு, நிலத்தின் அமைவு மற்றும் அமைப்பு
- மண்ணின் தன்மை - களித்தன்மை கூடிய மண், மணல் மண், மண்ணின் போசணைத் தன்மை, மண்ணரிப்பிற்கு உள்ளாகியுள்ள இடங்கள், நீர்தேங்கும் இடங்கள், கற்கள் காணப்படும் இடங்கள்,சிறுகற்களால் ஆன மேற்படை காணப்படல்.
- வீட்டுத் தோட்டத்தின் எல்லைகள் - வேலி உண்டா ∴ இல்லையா, மதில் அமைந்துள்ள விதம்
- வீடு மற்றும் ஏனைய கட்டிடங்களின் அமைவு
- வீட்டுத் தோட்டத்திற்கு சூரியஒளி கிடைக்கும் விதம் மற்றும் திசை
- நீர் விநியோகம் மானாவாரி, நீர்ப்பாசன வசதிகள்
- தற்போதுள்ள பயிர்களும் அவற்றின் தன்மையும் உற்பத்தி திறன் - குறைந்த விளைச்சல் அல்லது விளைச்சல் அற்றவை, நலிவடைந்த தாவரங்கள் கத்தரித்தல் மேற்கொள்ள வேண்டிய தாவரங்கள்.

2. வீட்டுத் தோட்டத்தின் தற்போதைய நிலையை ஆராய்ந்து பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றிக்கான தீர்வுகளை தீர்மானித்துக் கொள்ளவும். இதனடிப்படையில் வீட்டுத் தோட்டத்தினுள் உள்ளடக்க வேண்டிய அலகுகளை தீர்மானித்துக் கொள்ளவும்.

3. இதற்காக வீட்டுத் தோட்டத்திலுள்ள பல்வேறுபட்ட பகுதிகளையும் இனங்கண்டு கொள்ளவும். (நிழலான இடங்கள்,ஈரலிப்பான இடங்கள் நன்கு சூரிய ஒளி கிடைக்கும் இடங்கள்) ஒவ்வொரு பகுதியையும்வேறுபட்ட முறைகளை பயன்படுத்தி வேறாக்கிக் கொள்வதன் மூலம் வீட்டுத் தோட்டத்தின் அழகு அதிகரிக்கும்.

4. தீர்மானிக்கப்பட்ட அலகுகள் மற்றும் பயிர்களை வெளிகாட்டும் வகையில் வீட்டுத் தோட்டத்திற்கான வரைபடம் ஒன்றை வரைந்து கொள்ளவும்.
5. வீட்டுத் தோட்டத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் வீட்டுத் தோட்டத்தை அபிவிருத்தி செய்தபின் காணப்பட வேண்டிய விதத்தினை பருமட்டான வரைபடம் ஒன்றை வரைவதன் மூலம் அபிவிருத்தி நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளலாம்.
6. இவ்வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டு வீட்டுத் தோட்டத்தை படிப்படியாக வீட்டுத் தோட்டத்தை அபிவிருத்தி செய்ய வீட்டு உரிமையாளருக்கு வழிகாட்டவும்.

## கருத்திற் கொள்ள வேண்டிய தொழில்நுட்ப விடயங்கள்

பயிர்த் தெரிவு

போசாக்குமிக்க உணவு வேளை ஒன்றிக்கு அவசியப்படும் மூலப்பொருட்களை இயன்றளவு இணைத்துக் கொள்ளக்கூடிய விதத்தில் மரக்கறிகள், பழங்கள், கீரை வகைகள், கிழங்கு வகைகள் போன்ற பயிர் கூட்டங்களிலிருந்து பயிர்களை தெரிவு செய்து கொள்ளவும். உலர் வலயத்திற்கு பொருத்தமான நீர்ப் பற்றாகுறையை தாங்கி வளரக்கூடிய பயிர்களை தெரிவு செய்யவும்.

| | |
|---|---|
| மரக்கறிகள் | கத்தரி, வட்டுக்கத்தரி, முருங்கை, குட்டைமுருங்கை, பூசணி, உள்ளூர் மிளகாய் வர்க்கங்கள் (சேனை மிளகாய், கொச்சி) கெக்கரி, வெள்ளரி, பாகல்,சுண்டங்கத்தரி, தும்பை பாகல், வெண்டி, பயற்றை, சிறகவரை, சுரக்காய், நீர்த்து பூசணி |
| கீரை வகைகள் | வல்லாரை, பொன்னாங்காணி, முளைகீரை, சாரணை, பசளி, நீர்முள்ளி, அகத்தி, முருங்கை, ரணவரா, மணித்தக்காளி, கொவ்வை, குறிஞ்சா, பால் குறிஞ்சா, சாத்தாவாரி, வீட்டிலை, கங்கூன், நன்னாரி, தேங்காய்ப் பூ கீரை, |
| வாசனை மற்றும் மருத்துவ பயிர்கள் | கரிவேப்பிலை, ரம்பை, சேர, இஞ்சி, மஞ்சள், மிளகு |
| பழப் பயிர்கள் | மா, (கறுத்த கொலம்பான், வெள்ளை கொலம்பான், விளாட், டொமி EJC) திராட்சை, பப்பாசி, தோடை, எலுமிச்சை, மரமுந்திரிகை, நெல்லி வர்க்கங்கள், கொடிதோடை, வில்வம் பழம், கொய்யா, வத்தகை, கரும்பு, விளாம்பழம், வாழை (கோழிகூடு / கப்பல், புளிக்கதலி, சாம்பல் வாழை) |
| கிழங்கு வகைகள் | மரவள்ளி, கொடிக் கிழங்கு வகைகள், சேம்பு, கரணை கிழங்கு |
| வேறுபயிர்கள் | சோளம், பலா, தென்னை, தேக்கு, வேம்பு |

- சிறிய நிலப்பரப்பு ஒன்றிற்கு பொருத்தமான கூடியளவில் பரந்து வளராத உலர் வலயத்திற்கு உரிய பழப்பயிர் வர்க்கங்களை தெரிவு செய்து கொள்ளவும்.
- நலிவடைந்த நிலையிலுள்ள பல்லாண்டு பயிர்களுக்கு (பழப்பயிர்கள் தென்னை போன்றன) நன்கு சேதன பசளை இடவும். இவ்வாறான பல்லாண்டு பயிர்களை சுற்றி தேங்காய் உரி மட்டை அல்லது பிரயோசனமற்ற ஓட்டுத் துண்டுகள் போன்றவற்றை பயன்படுத்தி சிறிய அணை அல்லது மேடை ஒன்றை உருவாக்கி அதனுள் மரக்கறிகள், வல்லாரை போன்றவற்றை பயிரிடலாம்.
- பல்லாண்டு பழப்பயிர்களில் காணப்படும் தேவையற்ற நிழல் தரும் கிளைகள், நோய் மற்றும் பீடைகளனால் பாதிக்கப்பட்ட கிளைகள், இறந்த கிளைகளை போன்வற்றை வெட்டி அகற்றவும்.

- புதிதாக நடும் பழ நாற்றுக்களை சிறு பருவத்திலிருந்தே உரிய முறையில் பயிற்றுவித்து பராமரிப்பதற்கு இலகுவான சட்டம் (பிரேம்) ஒன்றை உருவாக்கி கொள்வதன் மூலம் வீட்டுத் தோட்டத்தில் நில வீண்விரயத்தையும் தேவையற்ற நிழலையும் தவிர்த்துக் கொள்ளலாம்.
- உலர் வலய மண்ணில் அடங்கியுள்ள சேதனப் பொருட்களின் அளவு மிகவும் குறைவாக காணப்படுவதனால் மண்ணிற்கு அடிக்கடி சேதனப் பொருட்களை சேர்ப்பது மிகவும் முக்கியமாகும்.
- அலகுகளை வேறாக்குவதற்கு பொருத்தமான பல்வேறு முறைகளை இனங்கண்டு கொள்ளவும்.

**அபிவிருத்தி உபாய மார்க்கங்களை இனங்கண்டு கொள்ளல்**

1. **வீட்டுக்கு அருகாமையில் அல்லது முற்றத்தில் பல்லாண்டுத் தாவரம் ஒன்றை கொண்டுள்ள இடம்**



பல்லாண்டு தாவரத்திலுள்ள அதிக நிழலை தரும் தேவையற்ற கிளைகளை வெட்டி அகற்றவும். மரத்தை சுற்றிவர மேடை ஒன்றை அமைத்து நிழலை விரும்பும் கிழங்கு வகைகள் வல்லாரை போன்ற பயிர்களை பயிரிடவும். வளர்ப்பு பயிர்களை மரத்தை சுற்றி வைக்க முடியும்.

2. **அதிக நிழலுள்ள பல்லாண்டு தாவரங்கள் அதிகளவில் காணப்படும் பகுதி**



தேவையற்ற தாவரங்களை அகற்றவும். தேவையற்ற கிளைகளை அகற்றவும். நிழலை விரும்பும் பயிர்களை பயிரிடவும். ( சேம்பு, கீரை வகைகள், அலங்கார தாவரங்கள்

3. **ஈரலிப்பான அல்லது நீர் தேங்கி நிற்கும் இடங்கள்**



கூடிய ஈரலிப்பினை தாங்கி வளரும் பயிர்களை தெரிவு செய்யவும் காண்கள் அல்லது பாத்திகளை உருவாக்கி நீர் வழிந்தோடக்கூடிய விதத்தில் உயர் பாத்திகளை உருவாக்கிக் கொள்ளவும். (பொன்னாங்காணி, கொஹிலை, சேம்பு)

4. **இயற்கையான வடிகால்கள் (காண்கள்) காணப்படும் இடம்**



மண் கழுவிச் செல்லப்படுவதை தவிர்ப்பதற்கு காண்களின் இருபுறமும் புற்களை பயிரிடுவது போன்ற பொருத்தமான முறை ஒன்றை பயன்படுத்தவும். நீர் மார்க்கத்தின் இரு புறமும் பொருத்தமான பயிர்களை பயிரிடவும். காணுக்கு மேலாகவுள்ள இடத்தினை உபயோகிக்கவும்.

5. **நன்கு சூரிய ஒளி விழும் இடம்**



காய்கள் உருவாகும் மரக்கறி வகைகள் பழப் பயிர்களை தெரிவு செய்யவும். (தக்காளி, கத்தரி, கறிமிளகாய், பயற்றை, பாகல், புடோல்)